

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.2.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக் நாதன், பொதுச் செயலாளர் அண்ணாமலை, பொருளாளர் வரதன் பூபதி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில், உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவற்றில் வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் தக்க சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.2.2025) முகாம் அலுவலகத்தில், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருப்பெரும்புதூர் ஸ்ரீராமனுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள் ஆகியோர் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 27.2.2025 அன்று முகாம் அலுவலகத்தில், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.2.2025) முகாம் அலுவலகத்தில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சந்தித்த, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை யொட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.2.2025) முகாம் அலுவலகத்தில், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.2.2025) முகாம் அலுவலகத்தில், நல்லி குப்புசாமி சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் முதல்வர் இல்லத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை. சொ.ஜோ.அருண் சே.ச.அவர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.